**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 393/2021 |
| நாள் | 04.02.2026 |
| வா.சா.2 | முத்துசாமி |
| வயது | 75 |
| ஊர் | தும்பிவாடி கிராமம் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>**

தாவாவை பிரதிவாதிகள் எனது சொத்தில் அத்துமீறி நுழைந்ததால் தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் சர்வே எண். 238/1 க்கு அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அந்த சர்வே எண்.238/1–ல் 2 ஏக்கர் 31 செண்ட் எனக்கும், சரவணன் என்பவருக்கும் கூட்டாக பாத்தியப்பட்டதாகும். மேற்படி சர்வே எண்.238/1–ல் 2 ஏக்கர் 31 செண்டில் எனக்கு நடுப்பகுதியில் கிழமேலாக பாகம் உள்ளது. எனக்கு தென்புறம் பழனிச்சாமியின் நிலமும், வடபுறம் கிருஷண மூர்த்தி என்பவரின் நிலமும் அமைந்துள்ளது. வாதிகளாகிய எங்களை தவிர்த்து, மூன்றாம் நபர்கள் யாருக்கும் அந்த இடத்தில் சொத்துக்கள் இல்லை என்றால், சரிதான். அசல் வழக்கில் சில நபர்கள் வெளியூரில் இருப்பதால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கமுடியவில்லை என்று கூறியிருப்பது வாரிசுகளை பற்றி என்றால், சரிதான். சர்வே எண்.238/1–ற்கு தென்புறமாக பழனிச்சாமி என்பவருக்கு சர்வே எண்.238/2–ல் பூமி உள்ளது என்றால், சரிதான். சர்வே எண்.238/1, சர்வே எண்.238/2 ற்கு மேற்புறமாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது என்றால், சரிதான். சர்வே எண்.238 க்கும் அதற்கு மேல்புறம் உள்ள நிலத்திற்கும் எங்கள் ஊரில் இருந்து வரும் பாதைவழியாகத்தான் செல்ல வேண்டும் என்றால், சரியல்ல. சர்வே எண்.238/1 உள்ள நிலத்திற்கு மட்டும் எங்கள் ஊரில் இருந்து வரும் வழிபபாதை மட்டும்

பயன்படுத்தப்படும். மற்ற சர்வே எண் நிலத்திற்கு சர்வே எண் 240 பாறை பாதை வழியாகத்தான் செல்ல வேண்டும். 2 வது வாதி பழனிச்சாமி சர்வே எண்.238/2–ல் உள்ள நிலத்திற்கு எந்த பாதை வழியாக செல்வார் என்றால், சர்வே எண்.238/1 ற்கு செல்லும் பாதை வழியாகத்தான் செல்வார். பிரதிவாதிகள், 2 வது வாதி பழனிச்சாமியின் நிலத்தை விலைக்கு கேட்டார்கள். சர்வே எண்.238/1–ன் தெற்கு கடைசியில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு வரைக்கும் வண்டிப்பாதை உள்ளது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண்.238/3 உள்ள நிலமானது சண்முகம் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். சர்வே எண்.238/4 –ல் உள்ள நிலமானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகும். எங்கள் ஊரில் இருந்து வரும் பாதையில் இருந்து சர்வே எண்.238/1–ல் இருந்து கிருஷ்ணமூர்த்தி பாகம் வரை முள்வேலி பாதையாக இருந்ததத்தை அகற்றிவிட்டுதான், கம்பிவேலியை அமைத்தோம் என்றால், சரிதான். கம்பிவேலி பாதையாக மாற்றிவிட்டோம். எங்கள் ஊரில் இருந்து சர்வே எண்.238/1–ல் நிலத்தில் இருந்து பிரதிவாதி நிலம் வரை பாதை இருந்தது என்றும், நாங்கள் கம்பிவேலி அமைக்கும் போது பிரதிவாதி நிலம் வரை செல்வதற்கு பாதையை விட்டு கம்பிவேலி போடுவதாக தெரிவித்துவிட்டுதான், முள்வேலிகளை அகற்றிவிட்டு, கம்பிவேலியை அமைக்கும் போது பிரதிவாதிகளுக்கு தெரிவித்தற்கு மாறாக வழியை மறித்து, கம்பிவேலி அமைத்தோம் என்றும், பிரதிவாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்வதாக கூறியதால், அவர்களுக்கு முன்பாகவே அவசரமாக அசல் வழக்கை தாக்கல் செய்தோம் என்றால், சரியல்ல. நாங்கள் கிருஷ்ணமூர்த்தி பங்கு வரை கம்பிவேலி அமைத்துள்ளோம். அதில் அவரவர் பங்கிற்குண்டான நிலத்திற்கு நேராக வழிப்பாதையை அமைத்துள்ளோம். பிரதிவாதிகள் 2 வது வாதி பழனிச்சாமிக்கு விடப்பட்டுள்ள பாதையின் வழியாகத்தான் அவர்களது நிலத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால், சரியல்ல. எங்கள் ஊரில் இருந்து வரும் பாதைக்கு வடபுறமாகத்தான் பிரதிவாதிகள் வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். பிரதிவாதிகள், 2 வது வாதி பழனிச்சாமி நிலத்தை யார் மூலமாக விலைக்கு கேட்டார்கள் என்ற விவரம்

எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 3 வது பிரதிவாதிக்கு திருமணமாகி அவர் எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால், அவர் உள்ளூரிலும் வசிக்கிறார். அவர் வேலை பார்க்கும் சென்னையிலும் வசிக்கிறார். 3 வது பிரதிவாதியை பொள்ளாச்சியில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. சர்வே எண். 248, 249, 149 ஆகிய சர்வே எண்களில் உள்ள நிலத்திற்கு சர்வே எண்.238/1–ல் உள்ள பாதை தான் அருகாமையில் உள்ளது என்றால், அவர்களுக்கு பாதையே சர்வே எண். 238/1–ல் இல்லை. தாவா சொத்தை பொறுத்தும், பிரதிவாதிகள் சொத்தை பொறுத்தும், நாங்கள் மாதிரி வரைபடம் தயார் செய்து இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகளாகிய எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைவிட, பிரதிவாதிகளுக்கு அதிகமான சொத்துக்கள் பாத்தியப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1 வது பிரதிவாதிக்கு சுமார் 80 வயது இருக்கும் என்றால், இருக்கலாம். பிரதிவாதிகள், 2 வது வாதியின் சொத்தை விலைக்கு கேட்டதாக நான் கூறுவது, முற்றிலும் தவறு என்றால், சரியல்ல. பிரதிவாதிகள், இன்றைய தேதி வரை சர்வே எண்.238/1–ல் உள்ள பாதை வழியாகத்தான் அவர்களது நிலத்திற்கு சென்று வருகிறார்கள் என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையரை நியமித்து, தாவா சொத்தை பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்தால் தாவா சொத்தின் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தான், இவ்வழக்கில் நான் நீதிமன்ற ஆணையரை நியமணம் செய்வதற்கு எவ்வித சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையரை நியமித்து, சொத்தை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால், சரிதான். பிரதிவாதிகளுக்கு எதிராக, 2 முறை சின்னதாராபுரம் காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் 4 வது வாதி சரவணன் பஞ்சாயத்து தலைவராக பதவி வகித்தார் என்றால், சரிதான். 4 வது வாதி பஞ்சாயத்து தலைவராக இருந்ததால் அவரது பதவி அதிகாரத்தை வைத்து,

சின்னதாராபுரம் காவல்நிலையத்தில் பிரதிவாதிகளுக்கு தடத்தில் உள்ள உரிமையை பறிப்பதற்கு முயற்சி செய்தோம் என்றால், சரியல்ல. சர்வே எண்.238/1–ல் உள்ள வழிப்பாதையில் பிரதிவாதிகளுக்கு செல்வதற்கு சட்டப்படி உரிமையுடையது உள்ளது என்றால், சரியல்ல. நாங்கள் தாவாவில் கோரிய பரிகாரம் சட்டப்படி எங்களுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகளுக்கு உள்ள சட்டப்படியான உரிமையை பறிக்க வேண்டும் என்பதற்காகவும், பிரதிவாதிகளை அச்சுறுத்த வேண்டும் என்பதற்காக தவறான சங்கதிகளை கூறி அசல் வழக்கை தாக்கல் செய்தோம் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.